செய்தி வெளியீடு எண். 120 நாள். 27.02.2018

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) குழு கூட்டம் மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் நடைபெற்றது**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) விதிகள் 1995 மற்றும் திருத்த விதிகள் 2016-ன்படி திருவள்ளூர் மாவட்ட அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்பு காலாண்டு குழுக்கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் குழுதலைவர் / மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்குழுவின் உறுப்பினர்களான மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், அலுவல்சார் / அலுவல்சாரா உறுப்பினர்கள் மற்றும் வருவாய் கோட்ட அலுவலர்கள், காவல் துணை கண்காணிப்பாளர்கள், அரசு வழக்கறிஞர் கலந்து கொண்டனர்.

வன்கொடுமைக்கு ஆளானவர்களுக்கு அளிக்கப்பட்ட தீருதவி, மறுவாழ்வு மற்றும் அவை பற்றிய விவரங்கள், இந்த சட்டத்தின்கீழ் தொடுக்கப்பட்ட வழக்குகள் குறித்தும், இச்சட்டத்தை செயல்படுத்தும் பல்வேறு அலுவலர்கள் / அமைப்புகளின் பங்கு மற்றும் பணியின் செயல்பாடுகள் குறித்தும், மாநில அரசால் பெறப்படும் பல்வேறு அறிக்கைகள் செயல்படுத்துதல் தொடர்பாகவும் குழுவில் விவாதிக்கப்பட்டது.

மேலும், இம்மாவட்டத்தில் மேற்படி சட்டபிரிவின் கீழ் பதியப்படும் வழக்குகளில் துரித நடவடிக்கை மேற்கொள்ள காவல் துறைக்கும் மற்றும் அரசு வழக்கறிஞருக்கும் குழுவின் தலைவர் / மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறிவுறுத்தினார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**